## பாட்டாளி மக்களின் பாதுகாவலர் – கழகத் தலைவர் !

# தொழிலாளர் நல ஆட்சியே கழக ஆட்சி!!



உழைக்கும் தொழிலாளர்களின் உன்னத திருநாளாம் மே தினம் உலகெங்கும் உள்ள தொழிலாளர்கள் தங்களின் உரிமை நாளாகவும், விடுதலை நாளாகவும் கொண்டாடி வருகின்றனர். 125 ஆண்டுகளுக்கு முன்பு 1886 ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டில் உள்ள சிக்காகோ நகரத்தின் தெருக்களில் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை என்ற கோரிக்கையை முன் வைத்து வீரமுழக்கம் எழுப்பியவாறு உரிமை பேரணி நடத்தினார்கள்.

அப்போது அமெரிக்க அரசு அடக்கு முறையை கட்டவிழ்த்துவிட்டு பல நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் துப்பாக்கி குண்டுகளுக்கு பலியாகி மடிந்தனர். இந்த தியாக போராட்டம் தான் ஆண்டுதோறும் உலகம் முழுவதும் உள்ள பாட்டாளி மக்களின் தினமாகவும், உழைக்கும் வர்க்கத்தின் உன்னத திருநாளாகவும் கொண்டாடி வருகின்றோம். முதல் மே தினம் 1889இல் பாரிஸில் கூடிய உலக சமாதான குழுவினரால் தொழிலாளர்களின் நன்னாளாக தீர்மா னிக்கப்பட்டது என்ற வரலாறு நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

சுதந்திரத்திற்கு முன்பே இந்திய ஒன்றியத்தில் முதல் முதலாக 1923 ஆம் ஆண்டு சென்னையில் தான் முதல் “மே தினம்” கொண்டாடப்பட்டது. இதனை அன்றைய தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்று அழைக்கப்படும் சிங்காரவேலர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வை அப்போதைய “தி இந்து” ஆங்கில இதழ் இந்த ”மே தினம்” தான் இந்தியாவில் ஏற்பட்ட ”முதல் செங்கொடி” ஆகும் என செய்தி வெளியிட்டு இருந்தனர்.

இந்திய தொழிலாளர்கள் மீது அந்நிய முதலாளிகளின் ஆதிக்கம் உச்சத்தில் இருந்த வேளையில் இந்திய ஒன்றியத்தில் முதன்முதலாக சென்னையில் தான் 1918 ஏப்ரல் 24ல் “மதராஸ் லேபர் யூனியன்” என்ற பெயரில் முறைப்படியான தொழிலாளர் சங்கம் உருவானது. இந்த சங்கத்தில் பி.பி.வாடியா தலைவராகவும், தமிழ்த் தென்றல் திரு.வி.க.வும் கேசவப்பிள்ளையும் துணைத் தலைவர்களாகவும், செல்வப்பதியும், ராமானுஜலுவும் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர் என்பது நாம் அனைவரும் அறிந்த தமிழ்நாட்டின் புகழுக்குரிய வரலாற்று பெருமையாகும்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பே பிரிட்டிஷ் முதலாளிகள் இந்திய முழுவதிலும் உள்ள உழைக்கும் தொழிலாளர்கள் மீது அநீதிகளையும் அடக்கு முறைகளையும் அடிமைத்தனத்தையும் ஆதிக்கம் செலுத்தி வந்த வேளையில் இந்தியாவில் தமிழ்நாட்டு மண்ணில் இருந்து தான் அந்நிய முதலாளிகளுக்கு எதிராக முதன்முதலாக தொழிலாளர் சங்கம் உருவானது, மே தின கொண்டாட்டம், செங்கொடியேற்றம் போன்ற நிகழ்வுகள் நடந்துள்ளன என்பது வரலாறு.

தற்போதும் பாசிச பாஜக ஆட்சியினர் செய்து வரும் மக்கள் விரோத, ஜனநாயக விரோத, செயல்களையும், அநீதிகளையும் கண்டிப்பதிலும் எதிர்ப்பதிலும் இந்திய ஒன்றியத்திலேயே முதல் குரல் கொடுத்து வருபவர் சுயமரியாதையும், வீரமும் நிறைந்த தமிழ் மண்ணில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் இந்தியாவின் முதன்மையான முதல்வர், மகத்தான தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான் என்பதை நாடறியும்.

தமிழ்நாட்டில் பாட்டாளி மக்களின் பாதுகாவலர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கழக ஆட்சி நடைபெற்று வருகிறது. 1967ல் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தலைமையில் கழக ஆட்சி அமைந்த போது இது தொழிலாளர்களின் நல ஆட்சி என்றும், “ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்” என்கின்ற கொள்கை முழக்கத்துடன் தொடங்கி செயல்பட்ட நிலையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்கு பின்னால் அவரது அன்புத்தம்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு “அண்ணா வழியில் அயராது உழைப்போம்” என்ற கொள்கையை முழக்கத்தோடு நடைபெற்ற நல்லாட்சியில் தொழிலாளர்களுக்கு என ஏராளமான நலத்திட்டங்களை அறிவித்தார்.

கழக ஆட்சி காலத்தில் தான் தொழிலாளர் நலத்துறை மற்றும் தொழிலாளர் நல வாரியங்கள் உருவாக்கப்பட்டன. பெரும் முதலாளிகளிடமிருந்த பேருந்து போக்குவரத்து அரசுடைமை ஆக்கப்பட்டது, அதே போல் சக்கரை ஆலைகளும் பொதுத்துறை நிறுவனங்களாகவும், கூட்டுறவுத்துறை மூலம் இயக்கப்பட கொள்கை முடிவு எடுக்கப்பட்டது.

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கென தனி வாரியம் உருவாக்கப்பட்டு இதன் மூலம் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு திருமண உதவி, மகப்பேறு உதவி, பிள்ளைகளுக்கான கல்வி உதவி,ஈமச்சடங்கு நிதி, ஓய்வூதியம் போன்ற பல நல உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

1969 ஆம் ஆண்டு முதலமைச்சராக பொறுப்பேற்ற முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள் எப்போதும் உழைப்புக்கும், உழைப்பாளிகளுக்கும் மதிப்பளிப்பவர். காடு நிலமானதும், வனம் தோட்டமானதும், மேடு மாளிகையானதும், கரம்பு ஊற்றானதும், பள்ளம் பாதையானதும் பாட்டாளியின் உழைப்பினால்தான் என்பதால் 1970 ஏப்ரல் 25ஆம் நாள் தொழிலாளர் தினமான மே தினத்தை சம்பளத்துடன் கூடிய அரசாங்க பொதுவிடுமுறை நாளாக முதன்முதலில் அறிவித்தார்.

1990 ஆம் ஆண்டு இந்திய ஒன்றியத்தின் பிரதமராக வி. பி. சிங் அவர்களின் தலைமையிலான தேசிய முன்னணி அரசு நடைபெற்றது. இதில் திமுக கழகமும் அங்கம் வகித்திருந்ததால், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வி. பி. சிங் அவர்களிடம் பாட்டாளி மக்களின் திருநாளான மே நாளை உலகின் பல்வேறு நாடுகள் விடுமுறை நாளாக கொண்டாடி வருகின்றனர், மேலும் இந்த ஆண்டு (1990) மே தினத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவதாலும் மே நாளை இந்திய அரசு பொது விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும் என கோரிக்கையை வைத்தார்.

இதனை பிரதமர் வி. பி. சிங் அவர்கள் உடனடியாக ஏற்றுக் கொண்டு ஆணை பிறப்பித்தார். “யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்” என்றார் போல் தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர்கள் மட்டும் பெற்று வந்த மே தின சலுகையை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில தொழிலாளர்களுக்கும் பெற்றுத்தந்த பெருமைக்குரியவராக இன்றும், என்றும் தொழிலாளர்களால் நன்றியுடன் போற்றப்படுகிறார்.

1990 மே 1ல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அண்ணா சாலை அருகிலுள்ள நேப்பியர் பூங்காவை, மே தின பூங்கா என பெயர் மாற்றம் செய்து மே தின நினைவுத்தூண் எழுப்பி, பாட்டாளி வர்க்கத்திற்கு பெருமை சேர்த்ததோடு ஆண்டுதோறும் கழகத் தலைவர் தலைமையில் தொழிலாளர் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு மே நாளை உணர்வோடும், உரிமையோடும் கொண்டாடி வருகின்றனர்.

கழக ஆட்சி காலத்தில் தான் தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள் தோறும் தொழிற்பேட்டைகள் (சிப்காட்) உருவாக்கப்பட்டு பல நூற்றுக்கணக்கான சிறு, குரு மற்றும் பெரிய தொழிற்சாலைகள் உருவானது. இதன் மூலம் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர் தோழர்கள் வேலைவாய்ப்பினை பெற்று இன்றும் நன்றியோடு கழக ஆட்சியை வாழ்த்தி வருகின்றன.

வடசென்னை பகுதியில் உள்ள ஒரு தனியார் டயர் தொழிற்சாலையின் நிர்வாகம் 2007ம் ஆண்டு தொழிலாளர் நல சட்டத்திற்கு எதிராக, தன்னிச்சையாக ஆலையை கதவடைப்பு செய்தது. இதனை அப்போதைய சங்கத்தின் தலைவராக இருந்த தோழர் தா. பாண்டியன் அவர்களின் தலைமையில் கண்டித்து போராட்டம் நடைபெற்றது. ஆனால் எந்த தீர்வும் எட்டப்படாத நிலையில் ஆலை கதவடைப்பு சம்மந்தமாக சில சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப்பேரவையில் பேசினார்கள்.

அனைத்தையும் கேட்டறிந்த அப்போதைய முதல் அமைச்சர் முத்தமிழ்றிஞர் கலைஞர் அவர்கள் உடனடியாக ஆலை கதவடைப்பை ரத்து செய்ய சொல்லி தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டது. ஆனால் ஆலை நிர்வாகம் அரசு ஆணையை உதாசீனப்படுத்தியது, இதனை அறிந்த முதல் அமைச்சர் அவர்கள் இன்னும் மூன்று தினங்களில் ஆலை நிர்வாகம் கதவடைப்பை விளக்கிக் கொள்ளவில்லையென்றால் ஆலையை அரசே ஏற்று நடத்தும் என்ற வரலாற்று சிறப்புமிக்க அறிவிப்பை சட்டபேரவையில் தெரிவித்தார்.

உடனடியாக ஆலையின் நிர்வாகம் கதவடைப்பை விலக்கிக் கொண்டது. தொழிலாளர்களும் பணிக்கு திரும்பினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்போதும் தொழிலாளர்களின் தோழராக இருந்து வந்துள்ளார் என்பதற்கு இந்த நிகழ்வும் உதாரணம் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

1957 ஆம் ஆண்டு முதன்முதலில் குளித்தலையில் இருந்து சட்டமன்ற உறுப்பினரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் தனது கன்னிப்பேச்சில் விவசாய தொழிலாளர்களின் துயரங்களைப் பற்றி பேசியது முதல் தனது இறுதி காலம் வரை அனைத்து துறைகளை சார்ந்த தொழிலாளர்களின் முன்னேற் தித்திற்காகவும், நலனுக்காகவும், நல் வாழ்விற்காகவும் எண்ணற்ற நலத்திட்டங்களை அறிவித்து இறுதிவரை பாட்டாளி மக்களின் பாதுகாவலராக விளங்கினார்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் இவர்களின் வழியில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் நமது முதல்வர் அவர்கள் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உடனடியாக செய்யக்கூடிய கோரிக்கைகளுக்கு உடனடியாக தீர்வு கொடுப்பதும், படிப்படியாக செய்ய வேண்டிய கோரிக்கைகளை படிப்படியாகவும் தீர்வு கொடுத்து வருகிறார் என்பதை நாம் அறிவோம்.

கடந்த (201621) பத்தாண்டு கால அதிமுக ஆட்சிக்காலத்தில் பல ஆயிரம் கோடி ரூபாய்களை கடனாக பெற்று ஆக்கபூர்வமாக செயல்படுத்தாமல் குறிப்பாக மின்சாரத்துறை, போக்குவரத்து துறை, போன்ற பல துறைகளையும் சீரழிந்த நிலையில் வைத்திருந்தனர். 2021ல் கழக ஆட்சி பொறுப்பேற்ற பின் கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான அரசு கடந்த பத்தாண்டு கால சீரழிவில் இருந்து படிப்படியாக முன்னேற்ற பாதையில் செயல்படுத்தி வருகிறார் என்பதை நாம் அறிவோம்.

**தொழிலாளர் நலன் மற்றும் தொழில் வளர்ச்சி:**

திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர் தலைமையிலான அரசு தொழிற் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்திய ஒன்றியத்தில் இரண்டாவது இடத்திலிருந்து முதல் இடத்தை நோக்கி சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்காக கழகத் தலைவர் அவர்கள் பல அந்நிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அமைத்து ஒரு டிரில்லியின் பொருளாதார இலக்கு என்ற நோக்கத்தோடு தொடர்ந்து தொழில் முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு கொண்டு வர அயராது பணியாற்றி வருகிறார்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சியை அடையும் போது பொருளாதார ரீதியாக உயர்வு பெறுவதோடு மட்டுமல்லாமல், பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு உருவாகும் என்ற அடிப்படையில் கழக அரசு தொழிலாளர் நலன் மற்றும் தொழில் வளர்ச்சி ஆகிய இரண்டையும் சமமாக கருதி செயல்பட்டு வருகிறது. இதற்காக ஒவ்வொரு பட்ஜெட்டிலும் தொழில் வளர்ச்சிக்கு என்று அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

202526 பட்ஜெட்டில் ஓசூரில் டைட்டில் பூங்கா, விருதுநகர் மாவட்டத்தில் புதிய மினி டைட்டில் பூங்கா, கோயம்புத்தூர் மற்றும் பல்லடத்தில் (செமி கண்டக்டர்) குறைக்கடத்தி தொழில்துறை பூங்காக்கள், மதுரை மற்றும் கடலூரில் காலணி பூங்கா, ஒன்பது இடங்களில் சிட்கோ தொழிற்பேட்டைகள் அமைப்பது என முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார். இதனால் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை பெறுகின்ற நிலையை கழக அரசு உருவாக்கியுள்ளது.

**காரல் மார்க்சிற்கு சிலை :** உலக அளவில் கொண்டாடப்பட்டு வரும் மாமேதையும், மார்க்சிய சிந்தனையாளருமான காரல் மார்க்சிற்கு இதுவரை தமிழ்நாட்டில் சிலை இல்லாத நிலையில் 342025 அன்று சட்டமன்றத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் உலக தொழிலாளர்களே ஒன்றுபடுவோம் என முழங்கிய காரல் மார்க்சிற்க்கு சென்னையில் சிலை வைப்பதாக அறிவித்தார்.

கழகத் தலைவர் எப்போதும் பாட்டாளி மக்களின் பாதுகாவலராக இருப்பவர் என்பதும், கழக ஆட்சி எப்போதும் தொழிலாளர் நல ஆட்சி என்பதை மெய்ப்பிக்கும் வகையில் செயல்பட்டு வரும் முதலமைச்சர் அவர்களுக்கு அரசியல் கட்சி தலைவர்களும், பொதுவுடைமைவாதிகளும், தொழிற்சங்க தலைவர்களும், நாடெங்கும் உள்ள உழைக்கும் வர்க்கத்தின் தொழிலாளர் தோழர்களும் இந்த வரலாற்று நிகழ்வுக்கு உணர்வு பூர்வமாக நன்றியை தெரிவித்துள்ளனர்.

**கடமை, கண்ணியம், கட்டுபபாடு:** தி.மு.கழகம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று கோட்பாடுகளை வைத்திருப்பது போலவே தொழிலாளர்களுக்கும் இம்மூன்றும் தேவை என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தெரிவித்துள்ளார், அதாவது பாட்டாளி மக்களுடைய “கடமை” சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலேதான் இருக்கிறது. பாட்டாளிமக்களுடைய “கண்ணியம் “ - தங்களுடைய சக்தியை பாழ்படுத்தி கொள்ளாததிலேதான் இருக்கிறது.

பாட்டாளி மக்களின் “கட்டுப்பாடு” - தங்களுடைய ஒற்றுமையை யார் எந்த மாதிரி முயற்சி எடுத்துக் கொண்டாலும் ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலேதான் இருக்கிறது. என பேரறிஞர் பெருந்தகை அண்ணா தெரிவித்ததை தொழிலாளர் தோழர்களும், பாட்டாளி மக்களும் இந்த மே தினத்தில் நினைவு கொள்வோம்.

பாசிச பாஜக்க ஆட்சியில் வஞ்சிக்கப்படும் தொழிலாளர் வர்கம் :

மோடி தலைமையிலான ஒன்றிய அரசு ஏற்கனவே நடைமுறையில் இருந்த 44 தொழிலாளர் நல சட்டங்களை 29 சட்டங்களாக குறைத்து மாற்றிவிட்டது. எஞ்சிய 15 சட்டங்களை ரத்து செய்து விட்டது. மாற்றப்பட்ட 29 சட்டங்களையும் நான்கு தொகுப்புகளாக மாற்றியதோடு மேலும் 44 சட்ட தொகுப்புகளில் இருந்த 1200 சரத்துக்களையும் 479ஆக குறைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டதிருத்தங்கள் நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் போதுமான விவாதம் இன்றியும், எதிர்கட்சி உறுப்பினர்கள் அவையில் இல்லாத நேரத்தில் சட்டம் இயற்றப்பட்டது ஜனநாயக விரோத செயலாகும்.

நமது முன்னோர்கள் எத்தைகைய வேதனைகளையும், சோதனைகளையும் கடந்து பல கட்ட வாதங்களுக்கு பிறகே கடந்த காலத்தில் சட்ட வடிவமான தொழிலாளர் நல சட்டங்கள் அனைத்தையும் கார்புரேட் நலன் ஒன்றே பெரிது என நினைத்து, இந்திய ஒன்றியத்தில் உள்ள அம்பானி, அதானி போன்ற பல கார்புரேட்டுகளுக்கு ஆதரவாகவும், உழைக்கும் தொழிலாளர்களுக்கு விரோதமாகவும், எதிராகவும் செயல்படும் பாசிச பாஜக்க ஆட்சி நடத்தி வரும் மோடி அரசையும் இவரது தேர்தல் கூட்டணி கூட்டாளி யையும் தொழிலாளர் தோழர்களும், பாட்டாளி மக்களும் ஒரு போதும் ஏற்கமாட்டோம் என இந்த மே தின நன்னாளில் சூளுரைப்போம்.

இல்லாமை, பேதமை நீக்கப்பட்டு, வலியோர் எளியோரை வாட்டிடும் கொடுமை ஒழிக்கப்பட்டு, எல்லோருக்கும் ஏற்றம், எல்லோருக்கும் எல்லாம் என்ற கோட்பாட்டின் படி தமிழ்நாட்டில் நடந்து வரும் கழகத் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டிற்கு நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளை கொண்டு வந்து, பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களக்கு வேலை வாய்ப்பினையும் வழங்கி தமிழர்களின் முன்னேற்றத்திற்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் அயராது உழைத்து வரும் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இவர்களின் அரும்பணிகள் மேலும் சிறக்க, தொடர 2026 தேர்தலில் கழக தலைவர் தலைமையிலான அரசு மீண்டும் அமைய 234க்கு 200க்குமேல் வெற்றி என்ற இலக்கினை மனதில் கொண்டு தொழிலாளர் தோழர்களும், பாட்டாளி மக்களும், கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க உரிமையோடும், உணர்வோடும் உழைப்போம், உழைப்போம், வெல்வோம்.



மு.இராஜகாந்தம்
மாநில துணை செயலாளர்
தொழிலாளர் அணி



சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் பகுதி அமைப்பாளர் ஆர்.கே.சந்திரேஷ் மற்றும் மாவட்ட பிரதிநிதி பாலாஜி ஆகியோர் தலைமையில் வேளச்சேரி கிழக்கு பகுதி செயலாளர் துரை கபிலன் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.விநாயகமூர்த்தி முன்னிலையில் மாவட்டக் கழக செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்ரமணியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகராஜா ஆகியோர் கலந்து கொண்டு பொது மக்களுக்கு குளிர்ந்த நீர் வழங்கும் குடிநீர் குடில் திறந்து வைத்து மோர், தர்பூசணி, வெள்ளரிக் காய், ரோஸ் மில்க் வழங்கினர். இதில் வட்ட கழக செயலாளர் ஆ.பாண்டியன், மு.தனசேகரன், கா.கணேஷ் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கழக ஆட்சியில் சிலைகள் மீட்பு!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதில்!

சென்னை, மே 1 - தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 28.03.2025 அன்று காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை மானியக் கோரிக்கையின் போது வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் ஓ.எஸ்.மணியன் சிலைகள் மீட்பு குறித்து பேசியதற்கு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பதிலளித்தார்.

அது வருமாறு:-

உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற போது இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு சிலைகள் எவ்வளவு மீட்கப்பட்டுள்ளது என்று ஒரு கேள்வியை எழுப்பினார்.

07.05.2021 முதல் 31.03.2025 வரையில் 236 உலோக சிலைகள் இந்த திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் மீட்கப்பட்டுள்ளது.



அதுபோல் 98 கற்சிலைகள், 11 மரச்சிலைகள், 72 கலைப்பொருட்கள் உள்ளிட்ட மொத்தம் 437 சிலைகள் மற்றும் கலைப் பொருட்கள் முதலமைச்சர் அவர்களின் கையில் இருக்கின்ற காவல்துறை தான் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு மீட்டிருக்கிறது என்பதை பேரவைத்தலைவர் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

## மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் தலைமை !

# 38வது வட்ட கழகம் சார்பில் தண்ணீர் பந்தல்!

### ஆர்.டி.சேகர் திறந்து வைக்கிறார் ! ஜே.ஜே.எபினேசர் - எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் பங்கேற்பு!

சென்னை, மே. 1- 38வது வட்ட கழக செயலாளரும் 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் தலைமையில் நீர்மோர், குளிர்பானம் தர்பீஸ் ,கிர்ணி பழம், வெள்ளரிக்காய், தண்ணீர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி இன்று (01.05.2025) வியாழக்கிழமை) காலை 10.00 மணியளவில் எண்ணூர் நெடுஞ்சாலை வைத்திய நாதன் மேம்பாலம் பவர் ஹவுஸ் பஸ் ஸ்டாண்ட் அருகில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு தண்ணீர் நீர் மோர் பந்தல் திறந்து வைக்கின்றனர்.

இதில் 38வது வட்டக் கழகத்தை சார்ந்த மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், மகளிர் அணியினர், மற்றும் கழக தோழர்கள் கழக செயல் வீரர்கள் வீராங்கனைகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச்செயலாளர் நேதாஜி யு.கணேசன் தெரிவித்துள்ளார்.

## “காலனி” எனும் சொல் நீக்கம்!

# பட்டியலின மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றி!

### தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி.பிரிவு மாநில தலைவர் எம்.பி.ரஞ்சன்குமார் அறிக்கை!

சென்னை, மே. 1 - “காலனி” எனும் சொல்லை நீக்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்.சி. பிரிவுத் தலைவர் எம்.பி.ரஞ்சன்குமார் நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி. பிரிவு மாநில தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

2021 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு சொன்னபடியே தமிழ்நாட்டு மக்களுக்கு விடியலைத் தந்திருக்கிறது.

4 ஆண்டுகளை கடந்து 5 வது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் நிலையில், திமுக அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடைந்துள்ளன என்பதை எவராலும் மறுக்க முடியாது. அதற்கு ஏராளமான உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

பெண்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயணமான விடியல் திட்டம், மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டம் என பெண்கள் மட்டுமின்றி ஆண்களையும் சென்றடைந்திருக்கிறது. கடந்த 4 ஆண்டுகளில் பெண்கள் சுயச்சார்பு கொண்டவர்களாக உயர்ந்திருப்பதாக மத்திய அரசின் தரவுகளே தெரிவிக்கின்றன. பட்ஜெட்டை ‘ரூ’ போட்டு அலறச் செய்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தன்மானமிக்கவர்கள் தமிழர்கள் என்பதை பறைசாற்றி விட்டார்.

நிதிப்பகிர்வில் மோடி அரசு பாரபட்சம் காட்டிய போதும், 2024-25 ஆம் நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 9.69 சதவீதம் உயர்ந்து, இந்தியாவிலேயே பொருளாதாரத்தில் முதலிடத்தைப் பிடித்திருக்கிறது தமிழ்நாடு. இது 14 ஆண்டுகளில் இல்லாத சாதனையாகும்.

கல்வி வளர்ச்சி, முதலீடு ஈர்ப்பு, உற்பத்தி அதிகரிப்பு



போன்றவையே பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணம். மனித உரிமைகளைக் காப்பதிலும் திமுக அரசுக்கு நிகர் திமுக அரசு தான். கடன் வசூலிக்கும் போது மனித உரிமைகள் பெருமளவில் பாதிக்கப்படுவது வாடிக்கையாக இருந்தது. இந்தப் பிரச்சினைக்கு மணி கட்டியிருக்கிறார் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

தனிநபர்கள், சுய உதவிக்குழுக்கள் உள்ளிட்டவற்றிற்குக் கடன் வழங்கும் நிறுவனங்கள் வலுக்கட்டாயமாக வசூலிப்பதைத் தடுக்க வகை செய்யும் புதிய சட்டத்திருத்த மசோதாவைத் தாக்கல் செய்திருக்கிறார். இது அடித்தட்டு மக்களை குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு அரணாக மாறும் என்பதில் சந்தேகம் இல்லை.

நம் மண்ணின் ஆதிக்குடிகளை இழிவு செய்யும் அடையாளமாக உள்ள ’காலனி’ எனும் சொல் அரசு ஆவணங்களில் இருந்தும் பொதுப் புழக்கத்திலிருந்தும் நீக்கப்படும் என்ற முதலமைச்சரின் அறிவிப்பு வரவேற்கக்கூடியது. பட்டியலின மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய முதலமைச்சருக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி., பிரிவு சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குப்பலதுறைகளில் தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்திருக்கிறது.

உயர் கல்வி சேர்க்கையில் 50 சதவீதத்தைக் கடந்து நாட்டிலேயே முதலிடத்தைப் பிடித்திருக்கிறது தமிழ்நாடு. தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள் 1.43 சதவீதம் மட்டுமே. அந்த வகையில் வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. 2024-25ம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம் ரூ.3,58,000 லட்சமாக உள்ளது. தேசிய சராசரி வெறும் ரூ.2,06,000 லட்சம்தான்.

மக்களின் வாழ்வாதாரத்தை கடந்த 4 ஆண்டுகளில் திராவிட மாடல் அரசு உயர்த்தியிருக்கிறது என்பதற்கு இதைவிடச் சான்று தேவையா?

அதுமட்டுமின்றி, அதிக அரசு மருத்துவர்கள் மற்றும் மருத்துவக் கல்வி இடங்கள் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடே முதலிடம், மின்சார இரு சக்கர வாகன தயாரிப்பில் முதலிடம் வெற்றி முகம் தொடர்கிறது. இரவு, பகல் பாராமல் பணியாற்றும் காவல் துறையினருக்கு இது உத்வேகத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. சாமானிய மக்களுக்கு நற்செய்தியாக, ஆட்சேபனையற்ற நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வசிக்கும் 86,000 பேருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும் என்ற அறிவிப்பு வயிற்றில் பால் வார்ப்பதாக உள்ளது.

இதற்காக, பட்டா வேண்டுவோருக்கான வருமான உச்சவரம்பு ரூ.3 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சமாக உயர்த்திய முதலமைச்சரை மனதாரப் பாராட்டுகிறேன்.

அமைதிப்பூங்காவாக இருக்கும் தமிழ்நாட்டில் குழப்பம் ஏற்படுத்த அணி வகுத்து வருகிறார்கள். எத்தனை பேர் வந்தாலும், அவர்களை தமிழ்நாட்டு மக்கள் முற்றிலும் புறக்கணிப்பார்கள்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழக தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் நல்லூர் ஊராட்சி காந்திநகர் போலீஸ் பூத் அருகில் மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றி 500 ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர் முரசொலி மூர்த்தி மற்றும் கழக இளம் பேச்சாளர் கோகுல் ஆகியோர் சிறப்பரையாற்றினர். உடன் ஒன்றிய நிர்வாகிகள் ஏ.காசீம் முகம்மது, கே.எம்.துரைவேல், ப.சீனிவாசன், கே.வீரம்மாள், செ.அரசு, இரா. விஜயன், பா.சேகர், பொன்.கோதண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை நல்லூர் ஊராட்சி கிளை பொறுப்பாளர் வீரபாண்டிநகர் ந.மணிகண்டன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.